# ஈழத்து தமிழ்க் காணொளிப்பாடல்களின் போக்கு

**பிறைநிலா கிருக்ஷ்ணராஜா[1] , சிவசுப்பிரமணியம் ரகுராம்[2]**

[1]ஊடகக் கற்கைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
[2]ஊடகக் கற்கைகள் அலகு , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*pirainila2011@gmail.com[1] , ragunadu2003@yahoo.com [2]*

**ஆய்வுச்சுருக்கம்** – சினிமா மக்கள் மத்தியில் ஒரு கலைப்படைப்பாக மட்டுமன்றி ஒரு பொழுதுபோக்குச் சாதனமாகவும் பெருமளவில் பார்க்கப்படுகின்றது. மகிழ்ச்சியாய் பொழுதைக் கழிப்பதற்குரிய ஒரு வழிதான் சினிமா எனப் பெருமளவில் கருதப்படுவதால் சமூகத்தில் கேள்விகளின்றி சினிமாமொழி ஆழமாக ஊடுருவி நிற்கின்றது. சினிமா காட்சிரூப மொழி என்பதால் அதன் கட்டுமானமாக காட்சி, கட்டம், அங்கம், தொகுப்பு ஆகியன அமைந்துள்ளன. இவைவழியே கதைகூறப் பயன்படுத்தும் ஊடகமுறைமையே சினிமாமொழி எனப்படுகின்றது. இத்தகைய சினிமாவின் வெளிப்படுத்தற் பரிமாணமாகவே காணொளிப்பாடல்கள் காணப்படுகின்றன. காணொளிப்பாடல் என்பது இயக்குநர் தான் கூறவந்த ஒரு விடயத்தை காட்சியமைப்போடு சேர்த்து இசைப்பாடலாக்கி வெளியிடுவதாகக் காணப்படுகின்றது. தொலைக்காட்சி முதலிய காட்சி ஊடகங்களில் காணொளிப்பாடல்கள் அதிகமான வரவேற்பை பெற்றுள்ளமையாலும் சமூகத்தில் புதிய காணொளிப்பாடல்களின் உருவாக்கம் அதிகரித்துவருகின்றமையாலும் இளைய சமூகம் மத்தியில் இந்த காணொளிப்பாடல்கள் அதிக செல்வாக்கைக்கொண்டு காணப்படுகின்றன. மிகச்சமீபத்திய காட்சிப்புல படைப்பாக்கமாக எழுந்துவரும் இந்த வடிவத்தை, அதன் போக்கை அடையாளம் காண்பதற்குரிய தேவை இன்று ஏற்பட்டிருக்கின்றது. இதனை ஒரு முறைசார்ந்த ஆய்வுநோக்கில் அணுகுவதற்காக ஈழத்திலிருந்து 2011முதல் 2016ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் வெளியான காணொளிப்பாடல்களில் அனைவருக்கும் கிடைக்கப்படக்கூடிய வகையிலமைந்த 27 காணொளிப்பாடல்கள் மாதிரிகளாக தெரியப்பட்டிருந்தன. இதனடிப்படையில் ஈழத்து தமிழ் காணொளிப்பாடல்களில் கையாளுகின்ற விடயங்கள் பற்றிய போக்கினை அடையாளங்காணுதல் மற்றும் இந்த காணொளிப்பாடல்களின் உருவாக்கத்தில் படைப்பாளிகளுக்கு இருக்கக்கூடிய சாதக, பாதகத் தன்மைகளைக் கண்டறிதல் போன்றவற்றை வெளிக்கொண்டு வருமுகமாக பெறுதிகள் சார்ந்து, உள்ளடக்கப் பகுப்பாய்வாக இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இதில் காணொளிப்பாடல்களினுடைய விடயப்பரப்பு, அதனுடைய வரிகள், இசை, பாடலுக்குரிய காட்சியமைப்பு, நடிப்பு என்பவை கருத்திற்கொள்ளப்பட்டன. காணொளிப்பாடல்களைப் பற்றிய ஆர்வம் உள்ளவர்கள், இயக்குநர்கள், இலக்கிய ஆர்வலர்கள், இசையமைப்பாளர்கள் போன்றோரிடம் நேர்காணல்கள், குவிமையக் கலந்துரையாடல்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. இதன்மூலம் ஈழத்தில் உருவாகும் தமிழ் காணொளிப்பாடல்களினுடைய போக்கானது போரினுடைய தாக்கம், பிரபலத்துவம், நாயகத்துவம், காதல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியிருப்பதோடு, பொருத்தமான ஒலியமைப்பு, ஒளியமைப்பு மற்றும் தொழிநுட்பத்தகைமைகளைக் கொண்டமைகின்ற அதேவேளையில் வணிகரீதியான சந்தைவாய்ப்புக்களையும் தக்கவைத்திருப்பது ஆய்வின்வழி கண்டறியப்பட்டது. காணொளிப்பாடல்களின் காட்சியமைப்புக்களைப் பொறுத்தவரையில், அவை சட்டகம், ஒருங்கிணைப்பு, படிமம், வேறுபடும் காட்சிப்புலங்கள் என்பவற்றில் படிமுறைவளர்ச்சி பெற்றுவருவதையும், உணர்வு வெளிப்பாடுகளைப் பொறுத்தளவில் பின்வந்த சில படைப்புக்களில் வன்முறை சார்ந்த நாயகத்துவத்தின் செல்வாக்கு அதீதமாகக் காணப்படுவதையும் ஆய்வு இனங்காட்டியது. ஆரம்பத்தில் உள்ளூர் விடயங்களை மையமாகக்கொண்டு காணொளிப்பாடல்கள் தயாரிக்கப்பட்டிருந்தாலும் அண்மைய காலத்தில் அதன் போக்கு மாற்றமடைந்து அதிகப்படியான பேசுபொருட்கள் தென்னிந்திய சினிமா நகர்வுகளையொட்டியே காணப்படுவதையும் ஆய்வு சுட்டிநிற்கின்றது.

**திறவுச் சொற்கள் :** காணொளிப்பாடல், காட்சிப்புலம், படைப்பாளி, போக்கு

## I. ஆய்வு அறிமுகம்

மக்களிடம் நேரடியாக செல்லுகின்ற அல்லது மக்களை தன்பால் ஈர்க்கின்ற ஊடகமாகவே சினிமா இன்றுவரை இருந்துவருகின்றது. பல கலைகளை சினிமா தனக்குள் உள்வாங்கி இன்று வளர்ச்சிபெற்றுள்ளது. சினிமா ரசிக்கத்தகுந்த ஒரு சாதனம். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் படைப்புக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

சினிமா கலைச்சாதனம் என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல அதுவொரு விஞ்ஞான சாதனம் என்பதும் உண்மை. இப்பாகுபாட்டினை அறிந்துகொள்ள சினிமாவை நன்கு ரசிக்கத் தெரிந்திருக்கவேண்டும். சினிமா மொழிமூலம் அனைத்தையும் பேசமுடியும். யதார்த்தங்களைப் பிரதிபலிக்கும் ஓர் கண்ணாடியாக சினிமாமொழி விளங்குகின்றது[1].

உலகப்போரும் அதன்பின்னரான காலங்களும்தான் உலக சினிமாவின் தோற்றத்திற்கான காரணங்கள். இலங்கை திரைப்படத்துறையின் ஆரம்பகாலமும் இந்தியாவையே சார்ந்திருந்தது. இலங்கையில் திரைப்படத்துறை தொடங்கிய காலத்திலிருந்து ஏறக்குறைய 10 ஆண்டுகள் சிங்களத் திரைப்படங்கள், தென்னிந்தியக் கலையகங்களிலேயே உருப்பெற்றன.

இவ்வாறாக ஆரம்பமாகிய ஈழ சினிமாவின் வரலாறு காலப்போக்கில் பல்வேறு படைப்பாக்கங்களையும் தொழிநுட்பங்களையும் உள்ளீர்த்தது. பொதுவில் குறுந்திரைப்படங்கள், காணொளிப்பாடல்கள் ஆவணப்படங்கள் என்பன சினிமாவின் பல்வேறு பரிணாமங்களாக உருவெடுத்துள்ளன. இவற்றிலே காணொளிப் பாடல்களின் வருகை இன்றையகாலத்தில் அதிகரித்துள்ளது.

காணொளிப்பாடல் என்பது இயக்குநர் தான் கூறவந்த ஒரு விடயத்தை தெரிவுசெய்து, அதனைக் காட்சியமைப்போடு சேர்த்து இசைப்பாடலாக்கி

வெளியிடுவதாகும். காணொளிப்பாடல்கள் காட்சியமைப்புக்களையும் தாண்டியதாய், வசன இசைக்கோர்ப்புக்களாயும் (Lyrical video songs)> இசைப்பாடலோடு சேர்த்து 'Motion Posters' என்றவாறும் வெளிவருகின்றன.

மேலைத்தேயத்தில் காணொளிப்பாடல்களின் செல்வாக்கு அதிகம். அண்ணளவாக 1970களில் மேலைத்தேயத்தில் இந்த பாரம்பரியம் ஆரம்பித்தது[2]. முதலாவது காணொளிப்பாடலானது அமெரிக்கப் பாடகரான India Arie இனால் வெளியிடப்பட்டது. காலப்போக்கில் இவை ஈழத்திலும் வளர்ச்சியடைய ஆரம்பித்தன[3]. காணொளிப்பாடல்களை விடுதலைப் புலிகள் போராட்டகாலத்தில் பரப்புரைக்கான ஒரு வலுமிகுந்த ஊடகமாகவே பயன்படுத்தியிருந்தனர். அதற்குமுன்னர் காணொளிப்பாடல்களின் பயன்பாடுபற்றிய எந்த குறிப்புக்களும் கிடைக் கவில்லை.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் மீண்டும் சினிமாவின் தாக்கம் ஏற்படத்தொடங்கியது. காணொளிப்பாடல்களினுடைய வருகையும் ஏற்பட ஆரம்பித்தது. 2005ஆம் ஆண்டளவில் வெளியான 'நம்மூரை மறந்துபோயி..' எனும் பாடல் இந்தவகையில் முக்கியமானது. தினேஸ் கனகரட்ணம் மற்றும் கஜன் ஆகியோரின் குரல்களில் மும்மொழிகளில் இக்காணொளிப்பாடல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இங்கு முக்கியமாக கூறப்படவேண்டியவர் 'இராஜ்'.[1] சிங்கள மொழியில் இவருடைய காணொளிப்பாடல்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தன. பின்னர் தமிழிலும் காணொளிப்பாடல்கள் அதிகம் வெளிவர ஆரம்பித்தன.

இதன்பின்னர் இலங்கையின் தனியார் தொலைக்காட்சிச் சேவையான சக்தி தொலைக்காட்சியானது காணொளிப்பாடல்களின் வளர்ச்சிக்கு துணையாய் அமைந்தது. இவர்களால் தயாரிக்கப்பட்ட 'சக்தி இசை இளவரசர்கள்' எனும் நிகழ்ச்சியின்மூலம் சமூகத்திலிருந்த பாடகர்களும், இசையமைப்பாளர்களும் இனங்காணப்பட்டதோடு இவர்கள் மூலம் காணொளிப்பாடல்களும் உருவாக்கப்பட்டன.[2]

இந்நிகழ்ச்சிமூலம் பிரபல்யம் பெற்றவர்தான் 'கந்தப்பு ஜெயந்தன்'. பின்வந்த காலங்களில் காணொளிப்பாடல்களின் அபரிதமான வருகைக்கு இவரும் ஒரு காரணம். தரமான ஒளிப்பதிவில் 2013இல் வெளியான பல காணொளிப்பாடல்களின் வருகைக்கு காரணமாயமைந்தவர் 'Star Media' பிரியந்தன்.

இதற்குப்பின்னரான காலத்திலிருந்து இன்றுவரை அதிகப்படியான காணொளிப்பாடல்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றமை சிறப்பான விடயமே. இசைப்பிரியன், மதீசன், பத்மயன் என்று பல இசையமைப்பாளர்கள் இதில் முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர். இந்த வளர்ச்சியின் பேறாக, இன்றைய ஈழத்து இயக்குநர்கள் பலராலும் காணொளிப்பாடல்கள் வெளியிடப்படுகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

**II. ஆய்வு முறையியல்**

காட்சி ஊடகங்களிலே இன்றையகாலத்தில் காணொளிப்பாடல்கள் அதிகமான இடத்தினை பெற்றுக்கொள்கின்றன. மேலும் அதிகளவான காணொளிப்பாடல்களின் வருகையையும் சமூகத்தில் காணக்கிடைக்கின்றது. இதுவரை மேற்கொண்ட தேடலின்படியும், கிடைக்கப்பெற்ற ஆவணங்களின்படியும் இந்த ஆய்வுப் பரப்புமீது குறிப்பிடத்தகுந்த முறைசார் ஆய்வுமுயற்சிகள் எவையும் மேற்கொள்ளப்பட்டதாக இனங்காணப் படாமையினால் "ஈழத்து தமிழ்க் காணொளிப் பாடல்களின போக்கு'' எனும் தலைப்பு ஆய்வுத்தலைப்பாக தெரிவுசெய்யப்பட்டது.

ஈழத்து தமிழ்த் திரைப்படத்திற்குரிய அடையாளத்தை நிறுவுவதற்கான முயற்சி என்பது குறைவாகவே அமைந்துள்ளது. இவை வணிக ரீதியாகவும் பெரும் வெற்றிகளை பெறவில்லை. இப்படியான சூழலில்தான் காணொளிப்பாடல்கள் என்கின்ற புதியவடிவம் மேலோங்கிவருகின்றது. அந்தவகையில் இதனுடைய போக்கை முறைசார்ந்த ஆய்வுநோக்கில் அடையாளம் காண்பதற்குரிய தேவை ஏற்பட்டிருப்பது ஆய்வுப்பிரச்சனையாகக் கொள்ளப்பட்டது.

இவ்வாய்வினுடைய பரப்பாக 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2016 வரையரன காலப்பகுதியில் ஈழத்திலிருந்து மட்டும் வெளியான சுமார் 27 காணொளிப்பாடல்கள் அடையாளங்காணப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. இவற்றை உருவாக்கியோர், இசையமைப்பாளர்கள் மற்றும் காணொளிப்பாடல்களினுடைய

1. https://www.youtube.com/user/IRAJPRODUCTIONS (பாடலின் இணைப்பு- Retrieved on 21/7/2017 at 21:00)
2. https://www.youtube.com/watch?v=zpkGJwAXYUU&list=RDzpkGJwAXYUU#t=64 (பாடலின் இணைப்பு- Retrieved on 21/7/2017 at 21:00)

தொழிநுட்பத்தன்மைகள் போன்ற விடயங்களும் ஆய்வுப் பரப்பிற்குள் உட்படுத்தப்பட்டன.

ஆய்வினை மேற்கொள்ள உள்ளடக்க பகுப்பாய்வு முறை தெரிவுசெய்யப்பட்டது. இங்கு குறிப்பிட்ட ஆய்வுத்தலைப்பினுள் உள்வாங்கப்படும் காணொளிப்பாடல்களினுடைய உள்ளடக்கங்களின் வாயிலாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் பாடலினுடைய விடயப்பரப்பு, அதனுடைய வரிகள், இசை, பாடலுக்குரிய காட்சியமைப்பு, நடிப்பு என்பவை கருத்திற்கொள்ளப்பட்டன. இது பெறுதிசார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை காணொளிப்பாடல்களோடு தொடர்புடைய படைப்பாளிகள், இசையமைப்பாளர்கள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட படைப்பாளிகளின் மத்தியில் குவிமையக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. மேலதிக தகவல்களைத் தெரிந்துகொள்வதற்காக நேர்காணல்முறையும் பயன்படுத்தப்பட்டது. இந்த நேர்காணலுக்காக காணொளிப்பாடல்களோடு தொடர்புடைய தெரிந்தெடுக்கப்பட்ட சில படைப்பாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாய்விற்கு முதல்நிலை தகவல் திரட்டும் கருவியாக குவிமையக் கலந்துரையாடல் பயன்படுத்தப்பட்டது. இதில் காணொளிப்பாடல்களைப் பற்றிய ஆர்வம் உள்ளவர்கள், ஈழத்தின் இயக்குநர்கள், இலக்கிய ஆர்வலர்கள், இசையமைப்பாளர்கள் போன்றோர் உள்ளடக்கப்பட்டனர். நேர்காணல் முறையைப் பயன்படுத்தி காணொளிப்பாடல்களின் உருவாக்கத்தோடு தொடர்புடைய ஈழத்து ஒளிப்பதிவாளரும், ஈழத்து இசையமைப்பாளருமாக இருவர் நேர்காணப்பட்டுள்ளனர்.

இங்கு குவிமையக் கலந்துரையாடலில் பங்குபற்றிய இசையமைப்பாளர் ஒருவர், காணொளிப்பாடல்களின் இசையமைப்பின் முக்கியத்துவம் கருதி நேர்காணலுக்கும் தெரிவுசெய்யப்பட்டார். இங்கு இரண்டாம் நிலைத் தரவுகளை பெற்றுக்கொள்ளும் மூலங்களாக சினிமா சார்ந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டன.

ஈழத்திலிருந்து மட்டும் 2011-2016 வரையான காலப் பகுதியில் வெளியான தமிழ் காணொளிப்பாடல்களில் அனைவருக்கும் கிடைக்கப்படக் கூடிய வகையிலமைந்த 27 காணொளிப்பாடல்கள் மாதிரிகளாகத் தெரியப்பட்டன. அவற்றில் ‘யாழ்ப்பாண ஊருக்குள்ளே’(2011), ‘யாழ்தேவி பாடல்’(2012), ‘வவுனியா மண்ணே’(2012), ‘எங்கோ பிறந்தவளே’(2012), ‘ஏதோ ஒரு மயக்கம்’(2012), ‘சுண்டுக்குளிப் பூவே’(2013), ‘தேன் சிந்தும் பூக்கள்’(2013), ‘சுவர் தேடும் சித்திரம்’(2014), ‘அழகிய புயலே’(2014), ‘தாய் மடியை தேடுகின்றேன்’(2014), ‘அலை பாயும் மனசு’(2014), ‘சக்தி வீட்டுப் பெடியன்’(2015), ‘அரக்கன்’(2015), ‘உயிர்ச்சூறை’(2015), ‘சிங்காரி’(2015) ‘பூ விழி’(2015), ‘ஒற்றையடி பாதையில’(2015), ‘மின்மினி’(2015), ‘கானல் கனவுகள்’(2015), ‘கிள்ளி நுள்ளி’(2015), ‘மொக்கை சாங்’(2015), ‘சோலையன்’(2016), ‘சிங்கிள் Anthem’(2016), ‘ரோமியோ’(2016), ‘உயிராய் வா’(2016), ‘அஞ்சல’(2016),‘நனவினில் தொலைந்தேன்’(2016) ஆகிய 27 தமிழ் காணொளிப்பாடல்களும் தெரிவுசெய்யப்பட்டன.

ஈழத்தில் உருவாகும் தமிழ் காணொளிப்பாடலின் போக்கானது போரினுடைய தாக்கம், பிரபலத்துவம், நாயகத்துவம், காதல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியிருப்பதோடு, பொருத்தமான ஒலியமைப்பு, ஒளியமைப்பு மற்றும் தொழிநுட்பதகைமைகளைக் கொண்டமைகின்ற அதேவேளையில் வணிகரீதியான சந்தைவாய்ப்புக்களையும் கொண்டிருக்கின்றன என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

இவ் ஆய்வானது ஈழத்தில் வெளியான காணொளிப்பாடல்களை மட்டுமே உள்வாங்கியுள்ளதே தவிர புலம்பெயர் தேசங்களிலிருந்து வெளியாகும் காணொளிப்பாடல்களை உள்வாங்கவில்லை. இங்கு உள்ளடக்கப்பகுப்பாய்வு என்பது பெறுதிசார்ரீதியாக மாத்திரமே ஆராயப்பட்டுள்ளது. இதனைவிட நேர்காணல் மற்றும் குவிமையக்கலந்துரையாடல்களில் தீர்ப்பாயப்படுத்தப்பட்ட முறையில் அணுகக்கூடிய விதத்திலிருந்த படைப்பாளிகள் மட்டுமே ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

### III. ஆய்வின் பேறுகளும் கலந்துரையாடலும்

இந்த ஆய்விற்கான முதல்நிலை தகவல்கள் திரட்டும் வழியாக உள்ளடக்கப் பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு படைப்பிற்கும் மையக்கரு என்கின்ற விடயம் காணப்படும். படைப்பினுடைய மையக்கருவானது குறித்த படைப்பின் போக்கினை தீர்மானிப்பதில் பிரதான காரணியாகச் செயற்படுகின்றது.

பொதுவாக இக்காணொளிப்பாடல்கள் அதிகமாக காதல் எனும் விடயத்தினை மையப்படுத்தியதாகவே காணப்பட்டாலும் போர், போரின் பாதிப்புக்கள், மனித உணர்வின் ஏக்கம், சமூக வன்முறை, நகைச்சுவை என்பவற்றையும் மையக்கருக்களாக உள்ளடக்கியுள்ளன.

படைப்பு ஒன்றின் உள்ளடக்கமானது குறித்த படைப்பினுடைய போக்கினை அல்லது தன்மையினைத் தீர்மானிக்ககூடிய ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. அந்தவகையிலே ஈழத்து தமிழ்க் காணொளிப்பாடல்களினுடைய உள்ளடக்கம் பற்றிய நோக்குதலும் இங்கு அவசியமாகின்றது. உள்ளடக்கம் எனும்போது பாடல் வரிகள், இசை, காட்சியமைப்பு ஆகிய விடயங்களை இதில் இணைத்து நோக்கலாம்.

ஈழத்து தமிழ் காணொளிப்பாடல்களினுடைய பாடல் வரிகளானவை ஈழத்தின் பேச்சுவழக்குகளையும், தமிழ்மொழியின் அழகியல்சார் வார்த்தைகளை வெளிப்படுத்துவனவாயும், மண்ணின் பெருமையைக் கூறும் விதமாயும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், எதுகை மோனையுடனான கவிவரிகள் மென்மையான இசையுடன் இணைந்து நகரக்கூடியவாறு, அவை பயன்படுத்தப்பட்டுள்ளன. பிரிவு, ஏக்க உணர்வின் வெளிப்பாடாகவும் சிலசமயங்களில் இவ்வரிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவைதவிர 'கானா' ரீதியிலான தன்னியல்பான வார்த்தைக்கோர்ப்புக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிலவற்றில் அதிகமாக பேச்சுமொழி பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதிகப்படியாக காதல் சார்ந்த வரிகள் எழுதப்பட்டிருந் தாலும் அனைத்து காணொளிப்பாடல்களிலும் ஏதோ ஒரு வகையில் பிரதேச முக்கியத்துவமோ இல்லை பண்பாட்டு அம்சங்களின் செல்வாக்கோ இல்லாமலில்லை எனலாம்.

2011இன் ஆரம்பத்திலிருந்த காணொளிப்பாடல்களை விட 2015, 2016 காலப்பகுதிகளில் வெளியாகிய காணொளிப்பாடல்களின் வரிகள் தென்னிந்திய திரைப்படப்பாடல்களுக்கு நிகரான வரிகளைக் கொண்டு காணப்படுகின்றமை சிறப்பு எனலாம். காலம் செல்லச்செல்ல கானொளிப்பாடலின் வரிகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

ஈழத்து காணொளிப்பாடல்களின் படைப்பின் தன்மையை தீர்மானிப்பதில் பாடல்களின் இசையமைப்பும், இசைத்தொகுப்பும் மற்றும் பாடியவர்களது குரலும் முக்கியமானதாகக் காணப்படுகின்றன. அந்தவகையில் தனித்தனியாக ஒவ்வொரு காணொளிப்பாடல்களினதும் இசைசார்ந்த விடயங்களை நோக்குகையில், ஒவ்வொரு படைப்பிற்கு ஏற்றவகையிலும் அவை பலசமயங்களிலும் பொருத்தமானதாகவே காணப்படுகின்றன எனலாம்.

ஆனால், பொதுவாக 2011ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு காலப்பகுதிவரையான படிநிலை வளர்ச்சியை நோக்குகையில் ஆரம்பத்தில் இருந்ததைவிட அதியுயர் ஒலித்தரங்களுடனும் ஒலிக்கோர்ப்புத் தொழிநுட்பங்களை பயன்படுத்தி காணொளிப்பாடல் படைப்பாக்கம் வளர்ச்சியடைந் திருப்பதையும் காணமுடிகின்றது. தென்னிந்தியப் பாடல்களோடு இவற்றை ஒப்பிட்டு நோக்க காரணம் என்னவெனில், ஆரம்பத்திலிருந்தே ஈழத்து தமிழ் சினிமா தென்னிந்தியாவை அடியொற்றியே வளர்ச்சியடைந்துள்ளமையேயாகும். மேலும் காணொளிப்பாடல்கள் எனும்போது எமக்கு நன்கு பரீட்சயமாயிருப்பவையும் தென்னிந்திய சினிமா காணொளிப்பாடல்கள்தான்.

காணொளிப்பாடல்களின் காட்சியமைப்பு சார் விடயங்களும், ஒளிப்பதிவு, நடிப்பு ஆகிய விடயங்களும் அதன் தன்மைகளை தீர்மானிக்கும் மற்றைய முக்கிய காரணிகளாக அமைந்து காணப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட 27 காணொளிப்பாடல்களினுடைய காட்சியமைப்பு, ஒளிப்பதிவு, நடிப்பு மற்றும் ஒப்பனைசார் விடயங்களை நோக்குகையில் - 2011களின் ஆரம்பத்தில் இவை சாதாரண தன்மையுடனேயே வெளிவந்திருந்தாலும், 2013களில் ஒளிப்பதிவு மற்றும் ஏனைய விடயங்களின் தரத்தில் மாற்றம் ஏற்பட்டது. இதற்கு 'ஸ்டார் மீடியா' பிரியந்தனின் தொழில்சார் நேர்த்தியுடனான ஒளிப்பதிவு ஒரு காரணமாகும். இதன்பின்னர் 2015களின் பின்னர் இவ்விடயங்களில் இன்னும் அதியுயர் தரத்திலான மாற்றங்கள் ஏற்பட்டமையைக் காணமுடிகின்றது. இந்த மாற்றம் யாழ். புலவர் வீடியோ குழுவினரால் ஏற்படுத்தப்பட்டது. மேலும் 2015இன் பின் வந்த சில படைப்புக்களில் வன்முறை சார்ந்த நாயகத்துவத்தின் செல்வாக்கு அதீதமாகக் காணப்படுவதையும் அவதானிக்க முடிந்துள்ளது.

ஒரு படைப்பிற்கு தொழிநுட்பம்சார் விடயங்கள் சிறப்பாக அமையவில்லையென்றால் குறித்த படைப்பானது மக்களை சென்றடையத் தாமதிக்கும். அந்தவகையில் ஈழத்து காணொளிப்பாடல்களினுடைய வருகையிலும் தொழிநுட்பத்தின் தாக்கம் காணப்படுவதோடு படைப்புக்களின் நகர்வையும் தீர்மானிப்பவையாக அவை காணப்படுகின்றன. தொழிநுட்பம்சார் விடயங்கள் காலத்திற்கு காலம் அதியுயர் வளர்ச்சிக்குள் உள்வாங்கப்பட்டு ஈழத்து தமிழ்க் காணொளிப்பாடல்களில் கையாளப்பட்டுள்ளமையை தெளிவாக அவதானிக்கலாம். இத்தகைய தொழிநுட்ப வளர்ச்சிகளால் இக்காணொளிப்பாடல்களினுடைய தன்மை, போக்கு என்பவையும் மாற்றமடைந்து செல்கின்றன.

இவ்வாய்விற்கு முதல்நிலை தரவுகள் திரட்டும் கருவியாக குவிமையக் கலந்துரையாடல் பயன்படுத்தப்பட்டது. இதன்படி பின்வரும் முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. காணொளிப்பாடல் படைப்புக்களின் நகர்வு அதிகமாக காதல்சார்ந்து நகர்கின்றது.

ஆரம்பத்தில் ஆர்வம் காரணமாக காணொளிப்பாடல்கள் தயாரிக்கப்பட்டிருந்தாலும் அண்மைய காலத்தில் அதன் போக்கு மாற்றமடைந்து பணமீட்டலை நோக்கி செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஈழத்து தமிழ்க் காணொளிப்பாடல்களின் போக்கினையும் வளர்ச்சியினையும் தொழிநுட்பம்சார் அம்சங்கள் இங்கு தீர்மானிக்கின்றன. இதன்காரணமாக தொழிநுட்பம் இலகுவில் படைப்புக்களில் உள்வாங்கப்படுகின்றது. அது, சில சமயங்களில் வருவாய் பற்றிய தீர்மானத்திலும் செல்வாக்குச்செலுத்துகின்றது.

மேலும், காணொளிப்பாடல்களின் கருவைத் தெரிவுசெய்வதிலிருந்து அதன் படிப்படியான நகர்வுகள் வரை படைப்பாளனது மனநிலையின் வெளிப்பாடு செல்வாக்குச் செலுத்துவதோடு படைப்பாளனுக்கும் சமூகத்திற்குமான ஊடாட்டமும் இதனைத் தீர்மானிப்பதாயமைகின்றது.

ஈழத்து தமிழ்க் காணொளிப்பாடல்களின் நகர்வில் அல்லது போக்கில் அண்மைக்காலங்களில் அதிகப்படியான தென்னிந்திய சினிமாத்தாக்கங்கள் காணப்படுகின்றன. இவை படைப்பின் போக்கில் செல்வாக்குச்செலுத்துகின்றன. அதன் ஒரு அடையாளமாக, ஈழத்து தமிழ்க் காணொளிப்பாடல்களின் படிமுறை நகர்விலே அண்மைக்காலங்களில் நாயகத்துவ ரீதியான வன்முறைகளை அதிகம் படைப்புக்கள் வெளிப்படுத்துவதையும் நோக்கமுடியும்.

இவ் ஆய்விற்கான முதல்நிலைத் தகவல்களைத் திரட்டும் மற்றுமொரு கருவியாக நேர்காணல் பயன்படுத்தப்பட்டது. இதற்கு ஈழத்து சினிமா துறையில் ஒளிப்பதிவாளராக இருக்கும் துசிகரன் என்பவரும் இசையமைப்பாளராயிருக்கும் மதீசன் என்பவரும் தெரிவுசெய்யப்பட்டு நேர்காணப்பட்டார்கள். இருவருக்கும் பொதுவான கேள்விகளே வழங்கப்பட்டன. அதற்கான அவர்களுடைய பதில்களிலிருந்து பின்வரும் முடிவுகள் கிடைக்கப்பெற்றன. காணொளிப்பாடலானது மக்களின் உளவியலோடு இணைந்திருப்பதனால் அதிக வலிமையானதாகக் காணப்படுகின்றது எனும் கருத்து அவர்களிடம் வெளிப்படுகின்றது. காணொளிப்பாடல்களின் உருவாக்கத்திலும்சரி ஏனைய படைப்புக்களின் உருவாக்கத்திலும்சரி பணம் எனும் விடயம் ஒரு பாதிப்பை அல்லது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமையும் தெளிவாகின்றது.

**IV. ஆய்வின் முடிவுகள்**

“ஈழத்து தமிழ்க் காணொளிப்பாடல்களின் போக்கு” எனும் ஆய்வின் பிரகாரம் கீழ்வரும் விடயங்கள் ஆய்வின் முடிவுகளாக இனங்காணப்பட்டுள்ளன. ஈழத்தில் அதிகப்படியாக காதலை மையப்படுத்தியதான காணொளிப்பாடல்கள்தான் அண்மையகாலத்தில் வெளிவருகின்றன. காணொளிப்பாடலின் நகர்வைத் தீர்மானிப்பதில் இசைசார் விடயங்கள் பெரிதும் செல்வாக்குச்செலுத்துகின்றன. இக் காணொளிப்பாடல்களில் காட்சியமைப்பு என்கின்றவிடயம் பொருத்தப்பாடுடையதாகக் காணப்படுவதோடு, படிமுறையான வளர்ச்சிகளையும் கொண்டுள்ளது. பின்வந்த சில படைப்புக்களில் வன்முறை சார்ந்த நாயகத்துவத்தின் செல்வாக்கு அதீதமாக காணப்படுகின்றது.

காணொளிப்பாடல்களினுடைய வளர்ச்சியில் தொழில்நுட்பப் பாவனையானது மிகச்சிறப்பாகக் கையாளப்பட்டு வருகின்றது என்பதோடு இத்தகைய தொழிநுட்பம்சார் விடயங்களின் மாற்றம் அதன் அடுத்தகட்ட நகர்வுகளைத் தீர்மானிப்பதாகவும் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் ஆர்வம் காரணமாக காணொளிப்பாடல்கள் தயாரிக்கப்பட்டிருந்தாலும் அண்மைய காலத்தில்

அதன் போக்கு மாற்றமடைந்து பணமீட்டலை நோக்கி செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஈழத்து தமிழ்க் காணொளிப்பாடல்களின் நகர்வில் அல்லது போக்கில் அண்மைக்காலங்களில் அதிகப்படியான தென்னிந்திய சினிமாத்தாக்கங்கள் காணப்படுகின்றன போன்ற முடிவுகள் ஆய்வின்மூலம் எட்டப்பட்டன.

மேலும், ஈழத்தில் உருவாகும் தமிழ் காணொளிப்பாடல்களினுடைய போக்கானது போரினுடைய தாக்கம், பிரபலத்துவம், நாயகத்துவம், காதல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியிருப்பதோடு, பொருத்தமான ஒலியமைப்பு, ஒளியமைப்பு மற்றும் தொழில்நுட்பதகைமைகளைக் கொண்ட மைகின்ற அதேவேளையில் வணிகரீதியான சந்தைவாய்ப்புக்களையும் அவை கொண்டிருக்கின்றன என்பது வெளிப்படுகின்றது.

**எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகள்**

ஆய்வொன்றினை மேற்கொள்ளும்போது எதிர்கால ஆய்வாளருக்கான பரிந்துரைகள் அத்துறைசார் ஆய்வுகளிற்கு முக்கியமான ஒன்றாகும். இங்கு 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டு வரையான காணொளிப்பாடல்களே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் இந்த ஆய்வுப் பரப்பை எதிர்காலத்தில் ஆய்வாளரகள் அதிகரித்துக்கொள்ளலாம். ஆய்வானது இங்கு பெறுதிசார் ரீதியில் உள்ளடக்கப் பகுப்பாய்வாக மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. எனவே இவ்வாய்வுசார்ந்த எதிர்கால ஆய்வுகளை எண்சார் ரீதியாகவும் மேற்கொள்ளலாம். ஆய்வானது 2011களின் பின்னரான காணொளிப்பாடல்களையே உள்வாங்கியுள்ளது. எனவே, எதிர்கால ஆய்வுகளில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் வெளியான காணொளிப்பாடல்கள் சார்ந்த ஒப்பீட்டுரீதியிலான ஒரு ஆய்வாகவும் மேற்கொள்ளப்படலாம்.

எதிர்கால ஆய்விலே ஆய்வினை மேற்கொள்ளும் நபர் ஆய்விற்கான மாதிரிகளை அதிகமாக உள்வாங்கலாம். இவ் ஆய்விலே இலகுவாக பெறக்கூடியவகையில் அமைந்த 27 காணொளிப்பாடல்கள் மாத்திரமே உள்வாங்கப்பட்டன. எனவே, எதிர்கால ஆய்வில் மாதிரிகளின் எண்ணிக்கையை அதிகரித்து ஆய்வினை மேற்கொள்ளலாம்.

இவ்வாய்விலே ஆய்வுக்கருவிகளாக குவிமையக் கலந்துரையாடல் மற்றும் நேர்காணல் ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டன. எதிர்கால ஆய்விலே ஆய்வாளர் வினாக்கொத்துகளை பயன்படுத்தியும் இது சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

இவ்வாய்வில் சமூக ஊடகங்களோ அல்லது நவீன ஊடகங்களோ உள்ளீர்த்துக்கொள்ளப்படவில்லை. இவ்வாய்வுசார்ந்து எதிர்காலத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர் அவற்றையும் தனது ஆய்வுப்பரப்பில் உள்ளீர்த்துக்கொள்ளலாம்.

**உசாத்துணை**

1. சிவத்தம்பி, கார்த்திகேசு. "தமிழ்ப் பண்பாட்டில் சினிமா", பாவை பிரிண்டேர்ஸ், சென்னை, 2014.
2. Thomas Hatch, ''A History of Hip-Hop'', Red Brick Learning Publication, Minnesota, 2006.
3. Alvarado, Manuel. "Video World Wide", United Nations Educational Scientific and Cultural Organization, France, 1988.